



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் உள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டட நிறைவுப் பணிகள் மற்றும் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (11.12.2025 ) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டட நிறைவுப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

கள்ளக்குறிச்சி, டிச.14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் உள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டட நிறைவுப் பணிகள் மற்றும் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (11.12.2025) வியாழக்கிழமை அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் நிர்வாகப் பயன்பாட்டிற்காக கள்ளக்குறிச்சி வட்டம், வீரசோழபுரத்தில் அனைத்து வசதிகளுடன், அனைத்துத் துறைகளும் ஒரே இடத்தில் செயல்படும் வகையில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டடம் 8 தளங்களைக் கொண்டு ரூ.139.41 கோடி மதிப்பீட்டில் சுமார் 35.18 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது.

இந்த கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டடத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் திறந்து வைக்க உள்ளார்கள். அந்த வகையில் இன்றையதினம் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டட நிறைவுப் பணிகள் மற்றும் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் நிறைவுப் பணிகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கினார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய மாவட்ட ஆட்சியரகத்தை திறப்பு விழா மேற்கொள்வது குறித்து மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் இதர பணிகள் குறித்தும் பொதுப்பணித்துறை மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

# சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத்துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, டிச. 14-

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது கார்த்திகை மாதத்தில் வரும் கடைசி சுபமுகூர்த்த தினமான 15.12.2025 அன்று கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, கார்த்திகை மாதத்தில் வரும் கடைசி சுபமுகூர்த்த தினமான 15.12.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் உத்தரவிடப்பட்டுள்ளது என்று பதிவுத்துறைத் தலைவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

# நெல்லை மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, டிச.14-

நெல்லை மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (15.12.2025 - திங்கள் கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் முக்கிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி, நாளை (15.12.2025- திங்கள் கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.



எனவே இதில் அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: "என் வாக்குசாவடி வெற்றி வாக்குச்சாவடி."

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டையில் நடைபெற்ற தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராம சரவணன் உள்ளனர்.



கடலூர், திருப்பாதிரிப்புலியூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கத்தின் கீழ் குடும்பத் தலைவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (12.12.2025) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி உட்பட பலர் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட – இரண்டாம் கட்ட விரிவாக்கம்!

# கடலூர் மாவட்டத்தில் - கூடுதலாக 41,055 மகளிர் பயன் பெறுகின்றனர்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – சி.வெ.கணேசன் தகவல்!

கடலூர், டிச. 14-

கடலூர் மாவட்டம் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விரிவாக்கத்தின் கீழ் 41,055 குடும்பத் தலைவிகள் பயன்பெறுகின்றனர் எனத் தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் (12.12.2025) நடைபெற்ற "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" நடைபெற்ற நிகழ்ச்சி யில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் விரிவாக்கத்தினை காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கடலூர், திருப்பாதிரிப்புலியூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி திருமதி மேயர் சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் 41,055 குடும்பத் தலைவிகளுக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான' வங்கிப் பற்று அட்டைகள் வழங்கும் பணியினை நேற்று முன்தினம் (12.12.2025) தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும்வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் சுயமாக முன்னேறும் வகையில் மகளிருக்கு இலவச பேருந்து பயணம்திட்டத்தினை செயல்படுத்தி கடலூர் மாவட்டத்தில் 23.74 கோடி மகளிர் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் செய்துள்ளனர்.

குடும்பத்திற்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடி திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை 15.09.23 அன்று தொடங்கி வைத்தார்.

கடலூர் மாவட்டத்தில் 7,78,296 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இதில் பெண்களின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் வகையில் 4,50,134 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1000 உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. பல்வேறு திட்டங்களின் மூலம் 1,40,000 நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதிய திட்டத்தில் ரூ.1,200 வீதம் வழங்கப்படுகிறது என மொத்தம் 5,90,134 நபர்கள் நேரடியாகப் பயன்பெற்று வருகின்றனர். மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனை முன்னெடுக்கும் பொருட்டு 8,948 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் முதற்கட்டத்தில் 1,13,75,492 குடும்ப தலைவிகள் பயனடைந்துள்ளனர். மாநிலம் முழுவதும் நடைபெற்ற 10,000 உங்களுடன் ஸ்டாலின் முகாம்களிலிருந்து மகளிர் உரிமைத் தொகை கோரி மனுக்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் கூடுதலாக சில தளர்வுகள் ஏற்படுத்தி இன்றைய தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கம் தொடங்கப்பட்டதன் மூலம் கூடுதலாக 16,94,335 குடும்பத் தலைவிகள் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் 1,30,69,827 குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் 95,362 வரப்பெற்றது. இதில் அரசின் வழிகாட்டுதலின் படி, இன்றைய தினம் கலைஞர் மகளிர் திட்டம் விரிவாக்கத்தின் மூலம் குறிஞ்சிப்பாடியில் 6,024 குடும்பத் தலைவிகளுக்கும், திட்டக்குடியில் 3,935 குடும்பத் தலைவிகளுக்கும், கடலூரில் 8,005 குடும்பத் தலைவிகளுக்கும், பண்ருட்டியில் 9,730 குடும்பத் தலைவிகளுக்கும், புவனகிரியில் 2,056 குடும்பத் தலைவிகளுக்கும், சிதம்பரத்தில் 1,827 குடும்பத் தலைவிகளுக்கும், காட்டுமன்னார் கோயிலில் 2,206 குடும்பத் தலைவிகளுக்கும், ஸ்ரீமுஷ்ணத்தில் 1,207 குடும்பத் தலைவிகளுக்கும், வேப்பூரில் 2,131 குடும்பத் தலைவிகளுக்கும், விருத்தாசலத்தில் 3,934 குடும்பத் தலைவிகளுக்கும் என மொத்தம் 41,055 குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறவும், தங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்ற சாதனையாளர்களாக மாறவும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியுள்ளார். மாறிவரும் சமூகப்பொருளாதார சூழலில் பெண்களின் பொருளாதார தேவையை நிறைவேற்றும் விதமாக மகளிர்கள் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ளும் வகையில் விடியல் பயணத் திட்டம், செயல்படுத்தப்பட்டு, கடலூர் மாவட்டத்தில் தினந்தோறும் சுமார் 1.90 இலட்சம் நபர்கள் பயணம் செய்கிறார்கள்.

அரசுப் பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர் கல்விபயில ஏதுவாக மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தில் 39,828 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்த சந்தேகங்களை போக்குவதற்காகவும், ஒவ்வொரு மாணவரும் தனக்கென ஒரு உயர்கல்வியினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட அனைத்து வகையான தகவல்களையும் வழங்கிடும் வகையில் 'நான் முதல்வன்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்துள்ளார். இத்திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் இதுவரை மாதம் 4,50,134 குடும்பத்தலைவிகளுக்கும், இன்றைய தினம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்ட விரிவாக்கம் தொடங்கி வைத்ததன் மூலம் கூடுதலாக 41,055 குடும்பத் தலைவிகளுக்கும் என மொத்தம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தினைச் சேர்ந்த 4,91,189 குடும்பத் தலைவிகள் பயனடைகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் கோ. புண்ணிய கோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) தீபா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் வடக்கு மண்டல இளைஞரணி மாநாட்டில் இளைஞரணியினர் பங்கேற்பீர்!

# மேல்மலையனூர் ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, டிச. 14-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம்அவலூர்பேட்டையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

நகரக் கழக செயலாளர்கள் அர்ஷத்,செல்வம், ஒன்றிய துணை பொருளாளர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பின்கீழ்மேல்மலையனூர் கிழக்கு,மேற்கு, மதியம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தி.மு.க. நிர்வாகிகள் ள்பங்கேற்று பொதுமக்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூற வேண்டும் ஒவ்வொரு வாக்கு சாவடியும் வெற்றி வாக்குச் சாவடி என்ற வகையில் பூத் கமிட்டி நிர்வாகிகள் பணியாற்ற வேண்டும், கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், டிஜிட்டல் பூத் ஏஜென்ட் நிர்வாகிகள், அனைவரும் ஒருங்கிணைந்து எஸ்.ஐ.ஆர் பணியை மேற்கொள்ள வேண்டும். இன்று (டிசம்பர் 14ஆம் தேதி) திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல இளைஞரணி மாநாட்டில் ஒன்றியத்திலிருந்து இளைஞர் அணி நிர்வாகிகள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பணிகுழு நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.